# வெற்றிடங்கள்

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

## காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவு (CResMPA)

## திட்டத்தின் ஆட்சேர்ப்பு

காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவுக்காக (CResMPA) உலக வங்கியிடம் இருந்து 76 மில்லியன் அமெ. டொலர் கடன் வசதி இலங்கை அரசாங்கத்திற்கு (GoSL) கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தினால் காலநிலை, வெள்ளம் மற்றும் மண்சரிவு முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்பை நவீனப்படுத்துவதன் மூலம் நாடு முழுவதும் சுமார் 11.2 மில்லியன் மக்கள் நன்மை பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் செயற்படுத்தப்படுகிறது.

முழுநேர ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவின் திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவுக்காக (PCU) இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| இல. | பதவி | பிரிவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பிரதித் திட்டப் பணிப்பாளர் | B | 01 |
| 2 | சிரேஷ்ட திட்ட நிபுணர் (கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல் (MEL) | C | 01 |
| 3 | சிரேஷ்ட பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ நிபுணர் | C | 01 |
| 4 | திறன் அபிவிருத்தி வல்லுநர் | C | 01 |
| 5 | நிதி முகாமையாளர் | C1 | 01 |
| 6 | திட்டப் பொறியியலாளர் (பெறுகை) | D | 03 |
| 7 | திட்டப் பொறியியலாளர் (ஒப்பந்த முகாமைத்துவம்) | D | 03 |
| 8 | ஏற்பாட்டியல் முகாமையாளர் | E | 01 |
| 9 | சமூக பாதுகாப்பு அதிகாரி | F | 03 |
| 10 | சுற்றுச்சூழல் அதிகாரி | F | 02 |
| 11 | காணி அதிகாரி | F | 02 |
| 12 | மனித வள முகாமைத்துவ அதிகாரி | F | 01 |
| 13 | பெறுகை அதிகாரி | F | 01 |
| 14 | பொறியியல் உதவியாளர் | F | 02 |
| 15 | வரைவாளர் | F | 02 |
| 16 | சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் | F | 01 |
| 17 | முகாமைத்துவ உதவியாளர் | - | 03 |
| 18 | ஓட்டுநர்கள் | - | 03 |
| 19 | அலுவலக உதவியாளர் | - | 02 |

மேலுள்ள பதவிகளுக்கான சம்பளம் (இல. 1 தொடக்கம் 6) அட்டவணை மூன்றின் பத்தி 03 இல் குறிப்பிடப்பட்டிருப்பதோடு தேவையான அடிப்படை தகைமைகள் மற்றும் அனுபவம் 01/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) இணைப்பு 1 இன் அட்டவணை 2 இல் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 17 | முகாமைத்துவ உதவியாளர் | - | 03 |

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகள், கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது பரீட்சை தவிர்த்து) அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவத்துடன் ஆங்கில மொழியில் தொடர்பாடக்கூடிய மற்றும் கணினி அறிவு பெற்ற அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவு: 01/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின்படி

| | | | |
|---|---|---|---|
| 18 | ஓட்டுநர் | - | 03 |

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் உட்பட இரண்டு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் (எதிர்பார்க்கப்படும் தேர்ச்சியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்). ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** 01/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின்படி

| | | | |
|---|---|---|---|
| 19 | அலுவலக உதவியாளர் | - | 02 |

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் உட்பட இரண்டு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அலுவலகத்தின் நாளாந்த செயற்பாடுகளில் கோப்புகள், ஆவணங்களை கையாளுதல் மற்றும் அதிகாரிகளுக்கு உதவுதல் உட்பட பொதுவான அலுவலக உதவிகள் மற்றும் எழுதுநர் பணிகளை மேற்கொள்ளல்.

சம்பள அளவு: 01/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின்படி

**பொதுவான நிபந்தனைகள்**

1. **வயது :** விண்ணப்பதாரர்கள் குறைந்தது 21 வயது மற்றும் 63 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
2. **சம்பள அளவு :** 2026.02.02 ஆம் திகதிய 01/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் 2026.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின்படி கொடுப்பனவுகளுடன் அரசு அங்கீகரித்த சம்பள அளவு.
3. இந்தப் பதவி நிலைகள் செயற்றிறன் மற்றும் திட்டக் கால நீடிப்பின் அடிப்படையில் சாத்தியமான நீடிப்புக்கான அடிப்படையுடன் ஆரம்பத்தில் 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை, பிரத்தியே ஒப்பந்த அடிப்படை.
4. **விண்ணப்பங்களை அனுப்புதல்:**

   உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்புகொள்ளக் கூடிய விபரங்களுடன் கல்வி, தொழில்முறை தகைமை மற்றும் அனுபவத்தை கொண்ட தமது சுயவிபரக் கோவையுடன் சேர்த்து தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர். தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவார்கள் என்பதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும். அடிப்படை தகைமையை நிரூபிப்பதற்கு சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

   விண்ணப்பங்களை கொழும்பு 05, ஜாவத்த வீதி, இல. 11, காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவு (CResMPA), திட்டப் பணிப்பாளருக்கு கிடைப்பதற்கு 2026 மார்ச் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**
**2026.03.13**